**<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், அரியலூர்</u>**

வா.சா.1 – சபாபதி த/பெ.கிருஷ்ணமூர்த்தி OS.No. 4 /2024 நாள் : 16.02.2026

**<u>4,5 ம் பிரதிவாதிள் தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

இந்த வழக்கு எந்த பரிகாரம் கேட்டு வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் எனது தாத்தா எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் ரத்து செய்த பத்திரம் செல்லாது என்று அறிவிக்க கோரி தொடுத்துள்ளேன். இந்த வழக்கு சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் எனக்கு தெரியுமா என்றால் சர்வே எண். 318/14 விஸ்தீரணம் 65 செண்ட் ஆகும். நான் தொடுத்துள்ள வழக்கின் 1ம் பிரதிவாதி கிருஷ்ணமூர்த்தி எனது தகப்பனார் என்றால் சரிதான். 2,5 ம் பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் சகோதரர்கள் என்றால் சரிதான். அவர்களது பெயர் பழமலை மற்றும் சிவக்குமார் எனது தகப்பனாரின் சகோதரர்கள். 1,2 ம் பிரதிவாதிகளுக்கு ஆண் வாரிசுகள்தான் உள்ளார்கள் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி சிவக்குமாருக்கு பெண் குழந்தைகள் மட்டும்தான் வாரிசு என்றால் சரிதான். கிருஷ்ணமூர்த்தியும், பழமலையும் ஊரில் நிறைய கடன் வாங்கி வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். நாராயணசாமி எனது தாத்தா என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகள் வாங்கிய கடனை நாராயணசாமியிடம் கேட்டார்கள் என்றால் சரிதான். அந்த கடனை கேட்டதால்தான் 19.06.2007 ல் பெயரளவில் ஒரு தான செட்டில்மெண்ட் எனக்கும் பழமலையின் குழந்தைகள் விக்னேஷ் மற்றும் அகிலேஷ் ஆகியோர்களுக்கு நாராயணசாமி ஒரு தான செட்டில்மெண்ட் தனித்தனியாக எழுதி வைத்தார் என்றால் சரிதான். அந்த சொத்தின் அனுபவம் மற்றும் உரிமை ஆகியவற்றை நாராயணசாமிதான் வைத்திருந்தார் என்றால் சரிதான். எனக்கும், விக்னேஷ் மற்றும் அகிலேஷ் ஆகியோருக்கு

எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் முறைப்படி அமலுக்கு வரவில்லை என்றால் சரியல்ல. கிருஷ்ணமூர்த்தியும் பழமலையும் வாங்கிய கடனை அதன் பின்னிட்டும் அடைக்க முடியவில்லை என்றால் சரிதான். சொத்தின் அனுபவம் மற்றும் உரிமை ஆகியவற்றை நாராயணசாமியே வைத்திருந்ததால் அவர் எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட்டை அவர் எனக்கும் விக்னேஷ் மற்றும் அகிலேசுக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட்டை 18.03.2010 அன்று ரத்து செய்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ரத்து பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ரத்து பத்திரத்தில் தாவா சொத்தின் பட்டா தனது பெயரிலும் அனுபவம் தனது பெயரிலும் இருக்கிறது என்று எழுதியுள்ளார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் மகன் விக்னேஷ் இதே நீதிமன்றத்தில் அவருக்கு எழுதிக்கொடுத்த தான பத்திரத்தை நாராயணசாமி ரத்து செய்துவிட்டார் என்று OS.28/2023 என்ற வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். கிருஷ்ணமூர்த்தியும், பழமலையும் வாங்கிய கடனை அடைக்க முடியாததால்தான் எனது தாத்தா நாராயணசாமி அவர் 18.03.2010ம் தேதியிட்டு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்துவிட்டு 5ம் பிரதிவாதியான சிவக்குமாரின் மனைவியான 4ம் பிரதிவாதி விஜயலட்சுமியின் பெயருக்கு கிரையம் செய்துக்கொடுத்தார் என்றால் சரிதான். விஜயலட்சுமிக்கு அந்த சொத்தினை நாராயணசாமி கிரையம் செய்துக்கொடுத்த போது சிவக்குமார் வெளிநாட்டில் இருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விஜயலட்சுமி இந்த சொத்தினை கிரையம் பெற்ற பிறகு சர்வே எண்.318/14 லிருந்து உட்பிரிவு செய்யப்பட்டு சர்வே எண்.318/14B என்று தனிப்பட்டா தனது பெயருக்கு

வாங்கியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தற்போது அந்த சொத்து விஜயலட்சுமியின் அனுபவத்தில்தான் இருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 4ம் பிரதிவாதியின் கிரையம் செல்லுபடியான கிரையம் என்றும், தாவா சொத்தில் எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தான செட்டில்மெண்ட் பத்திரம் ரத்து செய்தபோதும், கிரைய பத்திரம் ஏற்படுத்தப்பட்டபோதும் நான் ஊரில்தான் இருந்தேன் என்றால் சரியல்ல. நான் அப்போது எங்கு இருந்தேன் என்றால் கோயமுத்தூரில் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். எத்தனை வருடம் கோயமுத்தூரில் இருந்தேன் என்றால் 10 வருடங்கள் இருக்கிறேன். நான் 1,2 வருடங்களாகதான் கோயமுத்தூரில் இருக்கிறேன் என்றாலும், அதற்கு முன்பு நான் உள்ளூரில்தான் இருந்தேன் என்றாலும் சரியல்ல. விஜயலட்சுமி கிரையம் செய்த பின்பு அவர் வருவாய் ஆவணங்கள் வரி, வாய்தா, ரசீதுகள் ஆகியவவை விஜயலட்சுமியின் பெயரில் உள்ளது என்பதால் அவருடைய கிரைய பத்திரம் செல்லாது என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதியிடம் இருந்து தாவா சொத்தினை அபகரிக்கும் பொருட்டு 1ம் பிரதிவாதியான எனது தகப்பனாரின் தூண்டுதலின்பேரில் தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாவில் கூறியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், ஆகையினால் தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒப்பம்.திருமதி.M.S.மணிமேகலை,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
அரியலூர்.